# சிறிய மற்றும் நுண்மக் கைத்தொழில்களின் தலைவர் மற்றும் தொழில் முயற்சியாளரை மேம்பாட்டுத்தல் செயற்திட்டம் III (எஸ்எம்ஐஎல்ஈ - III) - 2010

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட யென் கணக்கிலிருந்து பற்றல்களும் அக்கணக்கிற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(இ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவுக் கூற்றுக்களின் மீது நியாயமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்

(ஈ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மொத்த பண அளிப்புக்கள் ரூபா 282,704,482 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலைமை ரூபா 9,321,199,607 ஆக இருந்தது. செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான பண அளிப்புக்களும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பண அளிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| **பங்குபற்றும் கடன் நிறுவனங்கள் (பீசீஜ)** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பண அளிப்புச் செய்யப்பட்டுள்ள தொகை** | | **2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலைமை** |
|---|---|---|---|
| | **2010** | **2009** | **2010** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| இலங்கை வங்கி (பீஓசீ) | 126,218,220 | 278,562,642 | 1,585,991,789 |
| வர்த்தக வங்கி (சீபீ) | 119,182,915 | 536,562,688 | 3,712,999,441 |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (டீஎப்சீசீ) | 7,316,894 | 149,361,738 | 1,682,398,739 |
| தேசிய அபிவிருத்தி வங்கி (என்டீபீ) | - | 104,511,489 | 704,458,713 |
| சம்பத் வங்கி (எஸ்பீ) | - | 45,879,975 | 1,353,143,828 |
| வயம்ப அபிவிருத்தி வங்கி (டபிள்யூடீபீ) | 13,964,999 | 15,172,495 | 82,930,726 |
| ஹற்றன் நெஷனல் வங்கி (எச்என்பி) | - | 47,083,668 | 133,596,661 |
| கந்துரட்ட அபிவிருத்தி வங்கி (கேடீபீ) | 16,021,454 | 41,013,256 | 65,679,710 |
| மொத்தம் | 282,704,482 | 1,218,147,951 | 9,321,199,607 |

## 2.2 விஷேட (யென்) கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுடன் ஒப்பிட்டு 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது விசேட (யென்) கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றது.

| | 2010 | | 2009 | |
|---|---|---|---|---|
| | ஜப்பான் யென் | இலங்கை ரூபா | ஜப்பான் யென் | இலங்கை ரூபா |
| சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 80,185,726 | 99,534,542 | 405,721,395 | 508,125,475 |
| கூட்டு | | | | |
| ஆண்டின் போது பெறுவனவுகள் | 144,440,395 | 181,738,908 | 651,071,224 | 808,379,079 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 1,431,033 | - | 1,177,939 |
| | 224,626,121 | 282,704,483 | 1,056,792,619 | 1,317,682,493 |
| கழி | | | | |
| பற்றுதல்கள் | 224,626,121 | 282,704,483 | 976,606,893 | 1,218,147,951 |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை | 80,185,726 | 99,534,542 |

## 3. கணக்காய்வு அவதானிப்பக்கள்

### 3.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப உதவிக் கடன் மற்றும் பொதுக் கடனின் ஒவ்வொரு கூறுக்குமான உபகடன்களின் செயல்முன்னேற்றம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட ரீதியாகவும் அத்துடன் துறை ரீதியாகவும் கடன்களின் திரண்ட பண அளிப்பு பொழிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் உபகடன்களிற்காக வழங்கப்பட்ட தகைமை இசைவு மற்றும் அங்கீகாரம் ஆகிய விடயங்கள் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) ரூபா 5,498,356 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக ஒரு நிலையான சொத்துக்கள் பதிவேடு அல்லது வேறு எந்த போதிய பதிவேடுகளையும் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் முன்னர் அமுலாக்கல் முகவராக இருந்த அப்போதைய தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் மூலம் செயற்திட்டத்தின் தற்போதைய அமுலாக்கல் முகவராக உள்ள கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிற்கு அவ்வாறான சொத்துக்களைக் கையளிப்பது தொடர்பான எழுத்துமூல ஆவணத்தினை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. இதற்கிணங்க உரிய சான்றுகள் இல்லாமையின் காரணமாக அவ்வாறான சொத்துக்களின் உள்ளமையையும் மதிப்பீட்டினையும் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கு ஆளணி ஊதியமாக ரூபா 4,239,778 தொகை செலுத்தப்பட்ருந்த போதிலும் வருகைப் பதிவேடு, சம்பளங்களும் கூலிகளும் பதிவேடு, மேலதிகநேர வேலை மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுப் பதிவேடு

முதலியவாறான பொருத்தமான பதிவேடுகளைக் கணக்காள்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. கொடுப்பனவுச் சான்றுறுதிகளின் பிரகாரம் குறித்த சில சந்தர்ப்பங்களில் ஊழியர்கள் சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் பொது கொடுப்பனவச் சான்றுறுதிகளில் கையெழுத்திட்டிருக்கவில்லை.

(ஈ) எரிபொருள், உராய்வு நீக்கிகள், உத்தரவுப்பத்திரம், காப்புறுதி என்பவற்றிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 154,137 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் உரிய உத்தியோபூர்வ வாகனங்களுக்காக நாளாந்த ஓட்ட அட்டவணைகள், சம்பவக் குறிப்புப் புத்தகங்கள் முதலியவற்றை கணக்காய்விற்குப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது நான்கு தொலைபேசிகளுக்காக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் தொலைபேசிக் கட்டணங்களாக ரூபா 309,851 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் ஒரு தொலைபேசிப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் அமுலாக்கல் முகவராண்மை மாற்றமடையும் போது அத்தொலைபேசிகளைக் கையளிப்பது தொடர்பான தகவல்களை கணக்காய்விற்குப் பெற்றுக்ளொள்ள முடியாதிருந்தது.

(ஊ) ‘‘செயல் விளைவு கண்காணிப்பு ஆய்வு – எஸ்எம்ஐஎல்ஈ - III செயற்திட்டம்’’ மீதான அறிக்கையினைத் தயாரிப்பதற்கான முற்பணமாக இரண்டு மதியுரையாளர்களுக்கு ரூபா 100,000 தொகையான தொழில்சார் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் மேற்கூறிய அறிக்கையானது மதியுரையாளர்களால் கைச்சாத்திடப்பட்ட நியதிகளும் நிபந்தனைகளின் (ரீஓஆர்) படி இன்னும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ள்படுகின்றன.

(அ) பண அளிப்புக்கள் நடைமுறை

2004 - 2010 ஆம் அண்டுகளுக்காக இச் செயற்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட கடன் ஒதுக்கீடு ஜப்பான் யென் 9,619 மில்லியன்களாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையும் கடன் பெறுவனவுகளின் மொத்த பண அளிப்புக்கள் ஜப்பான் யென் 9,603 மில்லியன் அல்லது 99.8 சதவீதமாக

இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இறுதிப் பாவனையாளர்களின் தொழில்நுட்ப, முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டுத் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சிக் கிரயத்தினை உள்ளடக்குவதற்கு அல்லது மதியுரைச் சேவைகளின் கிரயத்தினை உள்ளடக்குவதற்கு அல்லது தரக்கட்டுப்பாட்டு உபகரணங்கங்களைக் கொள்வனவு செய்வதற்கு கடன் உடன்படிக்கையின் பட்டோலை I இன் 1(4)(பீ) பிரிவின்படியான நோக்கெல்லையுடன் தொழில்நுட்ப மாற்றல் கடனுக்காக மொத்த கடன்தொகையில் ஜப்பான் யென் 157 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஜப்பான் யென் 10.9 மில்லியன் அல்லது 6.9% மாத்திரம் 2009 ஆம் ஆண்டின் இறுதி வரையும் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது தொழில்நுட்ப மாற்றல் கடனைப் பயன்படுத்துல் தொடர்பான விபரம் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ii) கடன் உடன்படிக்கையின் பட்டோலை I இன் 1(4)(அ) பிரிவின் படி பொதுக் கடனின் நோக்கெல்லையானது சிறிய மற்றும் நுண்மக் கைத்தொழில்களின் செயற்திறனான இயலளவு மேம்படுத்தவதாகும். பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் துறைரீதியாக கடன்களின் பண அளிப்பு முறைமை பின்வருமாறு இருந்தது.

| துறை | 2010 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட பண அளிப்புக்கள் | சதவீதமாக பண அளிப்புக்கள் |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | % |
| சேவைகள் | 69.79 | 25 |
| நிர்மாணம் | 25.08 | 9 |
| உலோக உற்பத்திகள் | 18.35 | 6 |
| ஆடைகள் | 5.22 | 2 |
| விவசாயக் கைத்தொழில்கள் | 9.97 | 4 |
| மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் | 12.72 | 4 |
| கால்நடை வளர்ப்பு | 13.37 | 5 |
| உணவுச் செயன்முறை | 67.01 | 24 |
| நானாவிததங்கள் | 9.58 | 3 |

| | | |
|---|---|---|
| இறப்பர் உற்பத்திப்பொருட்கள் | 7.46 | 3 |
| புடவைகள் | 9.91 | 4 |
| போக்குவரத்து | 12.25 | 4 |
| பிளாஸ்டிக் உற்பத்திப் பொருட்கள் | 3.82 | 1 |
| அச்சிடல் மற்றும் கடதாசி உற்பத்திப் பொருட்கள் | 14.68 | 5 |
| இரசாயணம் | 3.50 | 1 |
| | ----------- | --------- |
| மொத்தம் | 282.71 | 100 |
| | ==== | === |

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பொதுக்கடன்கள் தொடர்பான ரூபா 282.71 மில்லியன் மொத்த பண அளிப்புக்களில் ரூபா 69.79 மில்லியன் அல்லது 24.7% மற்றும் ரூபா 67.01 மில்லியன் அல்லது 23.7% ஆன பண அளிப்புக்கள் முறையே சேவைகள் உணவு மற்றும் செயன்முறைப்படுத்தல் துறைகளுக்காக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மொத்தப் பங்களிப்புக்களின் மிகுதியாகிய ரூபா 145.91 மில்லியன் அல்லது 51.6% ஏனைய 13 துறைகளுக்கு மத்தியில் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இது மீளாய்வாண்டின் போதான சமமற்ற பண அளிப்பினைக் காட்டுகின்றது.

(iii) பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மாவட்ட ரீதியான கடன்களின் பண அளிப்பு முறைமை பின்வருமாறு இருந்தது.

| மாவட்டம் | 2010 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட பண அளிப்புக்கள் | சதவீதமாக பண அளிப்புக்கள் |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | % |
| களுத்துறை | 19.73 | 7 |
| பதுளை | 2.03 | 1 |
| கண்டி | 27.48 | 10 |
| கொழும்பு | 55.57 | 20 |
| கம்பஹா | 67.55 | 24 |
| மாத்தளை | 4.67 | 2 |
| பொலன்னறுவை | 7.00 | 2 |

| | | |
|---|---|---|
| குருனாகல் | 49.89 | 17 |
| கேகாலை | 6.79 | 2 |
| காலி | 18.41 | 6 |
| புத்தளம் | 13.25 | 5 |
| நுவரெலியா | 8.24 | 3 |
| ஹம்பாந்தோட்டை | 2.10 | 1 |
| | ----------------- | ----------------- |
| மொத்தம் | 282.71 | 100 |
| | ==== | === |

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 282.71 மில்லியன் தொகையான மொத்த கடன் அளிப்புக்களில் ரூபா 173.01 மில்லியன் அல்லது 61.19% மூன்று மாவட்டங்களுக்கு மாத்திரம் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்த அதேவேளை ரூபா 109.70 மில்லியன் தொகையான மிகுதி பண அளிப்புக்கள் ஏனைய 10 மாவட்டங்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இது நிதிகளின் சமமற்ற பகிர்வினைக் காட்டுவதுடன் மிகுதியான 12 மாவட்டங்களுக்கு மத்தியில் எந்த ஒரு கடன் தொகையும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை வெளிப்படுத்துகின்றது.

(ஆ) கடன் பகிர்ந்தளிப்பு விடயங்கள்

---------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த கடன் அளிப்புக்கள் ரூபா 9,321.2 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பண அளிப்புக்கள் ரூபா 282.71 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பண அளிப்புக்களைத் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யும் வகையில் செயற்திட்ட முகாமைத்தவ பிரிவினால் பதிவேடுகள், கோவைகள், ஏனைய ஆவணங்கள் என்பன பேணப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க, உப செயற்திட்டங்களுக்காகப் பெறுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, செயற்திட்ட மதிப்பீட்டு அறிக்கைகள், தகைமைத் தடைநீக்க அறிக்கைகள் கடன் அங்கீகாரமும் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கான காரணங்களும், கடன்களை அங்கீகரிப்பதில் தாமதம், பண அளிப்பச் செய்வதில் தாமதம், காலாண்டு

செயல் முன்னேற்ற அறிக்கைகள் முதலிவற்றினை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ளமுடியாதிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது 166 நபர்களுக்கு ரூபா 282.71 மில்லியன் தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், கடன் விண்ணப்பங்களை உள்ளடக்கிய 166 கடன் ஆவணங்களில் ரூபா 41.6 மில்லியன் தொகையான அல்லது 14.7% ஆன 17 கடன்களுக்கான ஆவணங்கள் மாத்திரம் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது பண அளிப்புச் செய்யப்பட்ட ரூபா 282.71 மில்லியன் தொகையான கடன்களில் ரூபா 272.1 மில்லியன் அல்லது 96% ஆனவை 2010 சனவரி 10 இலிருந்து 2010 மே 31 வரையான 5 மாத காலத்தினுள் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 10.7 மில்லியன் அல்லது 4% ஆன மிகுதித் தொகை 2010 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 7 மாத காலத்தின் போது பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. ஆகவே 2010 மே மாதத்திற்கப் பின்னர் கடன்களை வழங்கவதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) கடன்களின் செயல் முன்னேற்றத்தினைப் பரீட்சிப்பதற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் எடுக்கப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பான சான்றுகளை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(v) மீளாய்வாண்டின் போது சம்பத் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றினூடாக கடன்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை.

(vi) கடன்கள் மற்றும் அவை மீதான அறவீடுகளின் முன்மதிப்பிடப்பட்ட பட்டோலையை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) சுழற்சி நிதியக் கணக்கு

------------------------------------------

கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 3(6) ஆம் பிரிவின் படி எஸ்எம்ஜஎல்ஈ சுழற்சி நிதியக் கணக்கு III இல் குறிப்பிடப்பட்டவாறு துணைக் கடனின் அமுலாக்கல் மற்றும் நிர்வாகத்திற்காக இலங்கை அரசாங்கம் இலங்கை மத்திய வங்கியுடன் கணக்கு ஒன்றினைத் தாபித்து மீளச்செலுத்தும்

துணைக் கடனின் முதல் தொகையும் அதன் மீதான வட்டியும் அக்கணக்கிற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். கடனின் முதல் தொகையினையும் வடடியினையும் மீளச் செலுத்துவதற்கும் எஸ்எம்ஜஎல்ஈ சுழற்சி நிதியக் கணக்கு III இனூடாக செயற்திட்டத்தின் அதே குறிக்கோள்கள் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் பங்கு பற்றும் கடன் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்கும் துணைக்கடன் முதல் தொகை மற்றும் அதன் மீதான வட்டியினை மீளச் செலுத்துவதிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். எனினும் சுழற்சி நிதியக் கணக்கில் காணப்படும் ரூபா 4,849,706,094 தொகையான மீதி மீளக் கடன் வழங்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) மீள்நிரப்பல்

---------------------

2010 திசெம்பர் 30 இல் கோரப்பட்ட 92 ஆம் இலக்க மீள் நிரப்பல் விண்ணப்பம் தொடர்பாக ரூபா 7,965,524 தொகை 2010 திசெம்பர் 03 ஆந் திகதி கோரப்பட்டு ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கட்டுநிதி நிதியக் கணக்கிற்கு மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் சுமுகமான மற்றும் உரிய கால அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்ட பணிப்பாளரையும் முக்கிய பதவியினர்களையும் உள்ளடக்கும் ''பிரதான செயற்திட்ட பதவியினர்களாக'' ஒரு குழு ஈடுபடுத்தப்படலாம். எனினும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் பல சந்தர்ப்பங்களில் மேற்கூறிய அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

(அ) எஸ்எம்ஜஎல்ஈ III செயற்திட்டத்தின் அமுலாக்கம் அப்போதைய தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சிடமிருந்து கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிற்கு 2010 ஏப்ரல் மாதத்தின் போது மாற்றப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் சுமுகமான மற்றும் உரிய கால அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்ட பணிப்பாளரையும் முக்கிய

பதவியினர்களையும் உள்ளடக்கும் ‘‘பிரதான செயற்திட்ட பதவியினர்களாக’’ இனங்காணப்பட்ட ஒரு குழு இன்னமும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிற்கு செயற்திட்டத்தினை மாற்றுவதற்கு முன்னர் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர், பண அளிப்பு உத்தியோகத்தர், புள்ளிவிபர/முகாமைத்துவ தகவல் முறைமை உத்தியோகத்தர் ஆகிய பிரதான பதவிகள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கணக்குகள் உதவியாளர், சாரதி, தரவுப் பதிவு இயக்குனர், அலுவலக உதவியாளர், மூன்று பயிலுனர்கள் ஆகிய பதவிகளை உள்ளடக்கும் ஏழு ஊழியர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது அங்கீகரித்த பதவியணிக்கு மிகையாக நியமிக்கப்பட்டடிருந்தனர்.

## 3.5 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வு விடயங்கள்

கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் எனது முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளில் இனங்காணப்பட்டு செயற்திட்டத்தின் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்வரும் கணக்காய்வு விடயங்கள் இன்னமும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டன.

(அ) கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிற்கு செயற்திட்டத்தினை மாற்றுவதற்கு முன்னர் செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்கான பதவியினர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பான பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்ட முகாமைத்துவ அலகின் வெற்றிடமான பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்களைக் கோரும் நடைமுறை அமைச்சினால் பின்பற்றப்பட்டிருந்த போதிலும் நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய (83 புள்ளிகள்) புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மற்றும் நேர்முகப் பரீட்சை சபையினால் சேர்த்துக்கொள்வதற்கு சிபார்சு செய்யப்பட்ட நபரினைச் சேர்த்தக்கொள்வதற்கு பதிலாக நேர்முகப் பரீட்சையில் ஆகக் குறைந்த புள்ளிகளைப் (43 புள்ளிகள்) பெற்றுக்கொண்ட நபர் 2009 யூலை 01 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் மேற்கூறிய பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். மேலும் ஆகக்குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட நபரினைப் பதவிக்குத் தெரிவு செய்தல் நியாய----ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அல்லது நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட நபரினைவிட உயர்ந்த புள்ளிகைளப் பெற்றுக்கொண்ட

ஏனைய விண்ணப்பதாரர்களை நிராகரித்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை.

(ii) 2007 ஏப்ரல் 05 இன் 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் திறந்த விளம்பரங்களின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் நேர்முகப் பரீட்சையினை நடாத்துவதனூடாக மாத்திரமே ‘‘பிரதான செயற்திட்ட பதவியினர்களை’’ உள்ளடக்கும் அனைத்து பதவியினர்களுக்குமான நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கான சுற்றாடல் உத்தியோகத்தர் பதவிக்கு அமைச்சு அவ்வாறான நடைமுறையினை பின்பற்றியிருக்காது செய்தித்தாள் விளம்பரங்களில் குறிப்பிடப்பட்ட அடிப்படை வேண்டுதல்களை நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்களில் எவரும் நிறைவேற்றியிருக்கவில்லை. அதற்கிணங்க எவரும் பதவிக்காக சிபார்சு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் வேண்டப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளையும் அனுபவத்தினையும் பெற்றிருக்காத ஆனால் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய நபர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது சுற்றாடல் உத்தியோகத்தராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

(iii). அங்கீகரித்த பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி சேர்த்துக் கொள்ளப்படாதிருந்த போதிலும் தாபனங்கள் விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயம் 12:5:4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அப்போதைய தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் பிரதான கணக்காளர் செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வாளராகச் நியமிக்கப்பட்டு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் ரூபா 111,378 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் எதுவும் 2013 சனவரி 31 ஆந் திகதி வரையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில், வணிக அமைச்சிற்குச் செயற்திட்டத்தினை மாற்றுவதற்கு முன்னர் செயற்பாட்டுச் செலவுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றினைத் திருத்துவதற்கு 2013 சனவரி 31 ஆந் திகதி வரை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்ட பணிப்பாளர் மாத்திரம் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றினைப் பயன்படுத்துவதற்கு தகைமை பெற்றுள்ளார். திணைக்களத் தலைவர் என்ற வகையில் இவர் மாதாந்த எரிபொருள் படிக்குத் தகைமை பெற்றுள்ளார். எனினும் மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் செயற்திட்ட வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அமைச்சுச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் 2008 யூன் 26 இன் 13/2008 ஆம் இலக்க மற்றும் 2008 யூன் 26 இன் 14/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அப்படிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தகைமை பெறாதிருந்த செயற்திட்ட பிரதிப்பணிப்பாளருக்கு 2009 யூலை மாதத்திலிருந்து 2009 திசெம்பர் மாதம் வரையான காலத்திற்காக வாகனப்படியாக ரூபா 110,455 தொகையும் எரிபொருள் படியாக ரூபா 93,600 தொகையும் செயற்திட்ட முகாமைத்தவ பிரிவினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2008 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய 06/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அமைச்சுச் செயலாளரின் முறையான அங்கீகாரம் இல்லாது உப செயற்திட்டங்களின் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக மேலதிக எரிபொருள் செலவாக ரூபா 56,950 தொகை செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அப்பரிசோதனைகள் தொடர்பான பரிசோதனை அறிக்கைகள் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(iii) 1997 பெப்ரவரி 03 இன் 07/1997 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் படி சம்பளத்தின் 1/20 ஆவது கொடுப்பனவின் கீழ் ஒரு மாதத்திற்கு ஒரு நாள் விடுமுறைக் கொடுப்பனவிற்கு மாத்திரம் பதவிநிலை உத்தியோகத்தர்கள் தகைமை பெற்றுள்ளார்கள். எனினும் முறையான அங்கீகாரம் இல்லாது ஒரு நாளுக்கு மேற்பட்ட விடுமுறை நாள் கொடுப்பனவுகளை செய்றதிட்ட முகாமைத்துவப் பிரிவு செலுத்தியிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) மேலதிகநேர வேலைக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு

(ஆ) காசு முகாமைத்துவம்

(இ) ஆளணிக் கோவைகளின் பராமரிப்பு